DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | நடராஜன் | Village | மலைரெட்டியூர் |
| Father's Name | சோமநாதன் | Taluk | வாணியம்பாடி |
| Age | 76 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **13.03.2026**

**<u>O.S. No. 108/2022</u>** **<u>வா.சா.1</u>** **<u>12.35 PM – 01.35 PM</u>**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. வழக்கில் வழக்கு சொத்திற்கு உண்டான செக்குபந்தி விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்திற்கு உண்டான பத்திரம் எதுவும் தாக்கு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய அப்பா பெயர் சோமநாத கவுண்டர் ஆகும். மேற்படி சோமநாத கவுண்டருக்கு 1994–ல் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை மூலம் வந்த வந்த பாகம் என காட்டுவதற்கு அந்த ஆவணத்தை இன்றைய தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது பதிவு செய்யப்பட்ட ஆவணம் தான் என்றால் சரிதான்.

2. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் சோமநாத கவுண்டருக்கு சர்வே எண்.169–ல் 11.86 ஏக்கர் நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சோமநாத கவுண்டருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள், சண்முகம் நடராஜன் மற்றும் மித்ரா ஆகும். மேற்படி நடராஜன் மற்றும் சண்முகம் இருவருக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது மற்றும் அது பதிவு செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டு எத்தனை வருடம் ஆகிறது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு பதிவு செய்யப்பட்டது என்றால் 25 வருடத்திற்கு மேல் ஆகிறது. மேற்படி பத்திரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது என்றால் சரிதான். மேற்படி இரண்டு பத்திரங்களையும் தாக்கல் செய்தால் எவ்வளவு சொத்து எனக்கு வருகிறது தெரியவரும் என்று சொன்னால் சரிதான். எனக்கும் சண்முகத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்தெந்த சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.169/1B –ல் விஸ்தீரணம் 7 ஏக்கர் 8

சென்ட் நிலம் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, சர்வே எண்.169/2 –ல் 7 சென்ட் வீட்டு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது, சர்வே எண்.169/3–ல் 3 சென்ட்.

4. இந்த வழக்கில் பிரதிவாதி 14 சென்ட் நிலத்தை சுவாதீனம் வைத்துள்ளதாக கூறும் பகுதி எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால் சர்வே எண்.169/1B –ல் 19 சென்ட் ஆக்கிரமித்துள்ளார். 2003–ல் இருந்து ஆக்கிரமித்தாரா அல்லது அதற்குப் பிறகு ஆக்கிரமித்தாரா என்றால் அதற்குப் பிறகுதான் ஆக்கிரமிப்பு செய்தார். 2003 ஆம் வருடம் தீர்ப்பின் பிறகு எவ்வளவு நாட்களில் ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் 6 மாதம் பொறுத்து 5 சென்ட் ஆக்கிரமித்தார். அதன் பிறகு 6 மாதம் பிறகு மீதிமுள்ள மொத்தம் 14 சென்ட் நிலத்தையும் ஆக்கிரமிப்பு செய்தார். மேற்படி ஆக்கிரமிப்பு செய்த நாளிலிருந்து பிரதிவாதியை ஆக்கிரமிப்பை விட்டு வெளியேர செல்லுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான்.

5. இந்த வழக்கை ஆக்கிரமிப்பு நீக்கி எனக்கு சுவாதீனம் கொடுக்க தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ள நான் கூறும் 19 சென்ட் நிலத்திற்கு உண்டான செக் பந்தி விபரம் என்னால் கூற முடியாது என்று சொன்னால் சரியல்ல, வடக்கில் சர்வே எண்.161/1B, தெற்கு புறம் இளங்கோவன் நிலம், கிழக்கு புறம் காந்தமணி நிலத்திற்கு மேற்கு, ரோட்டிற்கு மேற்கு. நான் தற்போது கூறும் செக்கு பந்தி விவரம் குறிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் தற்போது கூறிகிறேன், வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான்.

6. இந்த வழக்கில் 19 சென்ட் நிலம் யாருக்கு உரிமை பாத்தியம் என்று தான் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை தான் 2003–லிருந்து இருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஜனவரி மாதம் 2023 பிரதிவாதி பதில் தாக்கல் செய்யும்போதே வழக்கு சொத்து குறித்து உரிமை பிரச்சனை உள்ளது என குறிப்பிட்டுள்ளார் என்றாலும் தற்போது வரை உரிமை விளம்புகை பரிகாரம் கோரி வழக்கை திருத்தல் செய்யவில்லை என்று சொன்னால் என்றால் சாட்சி சிறிது நேரம் யோசித்து சரிதான் என கூறுகிறார்.

7. இந்த வழக்கில் 19 சென்ட் நிலத்தை எனக்கு கொடுக்குமாறு கேட்டு நீதிமன்றத்தின் தற்போது வரை எந்த ஒரு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சோமநாத கவுண்டருக்கு பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை தான் நானும் எனது சகோதரர் சண்முகம் பிரித்துக்

கொண்டோம் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

8. இந்த நீதிமன்றத்தில் பத்திரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை பட்டா மட்டும் தான் தாக்கல் செய்ததற்கு காரணம் பத்திரங்களில் சொத்து குறைவாக உள்ளதாலும் பட்டாவில் அதிகமாக சொத்து காண்பிக்கப்பட்டுள்ளதால் தான் பட்டாவை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சாட்சி அதற்கு அனுபவ பிரகாரம் பட்டா வழங்கியதாக கூறுகிறார். சோமநாத கவுண்டருக்கு பத்திரப்படி சர்வே எண்.169–ல் 11.86 ஏக்கர் சொத்து தான் பாத்தியப்பட்டது என்றால் பத்திரத்தில் அவ்வாறு உள்ளது ஆனால் அது தவறு. மேற்படி பத்திரத்தில் தவறாக உள்ளது என தற்போது வரை சோமநாத கவுண்டர் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளார் என்றால் செய்துள்ளார். அந்த வழக்கின் விவரம் கூற முடியுமா என்றால் வழக்கு எண் ஞாபகம் இல்லை வாணியம்பாடி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கின் தீர்ப்பில் மேற்படி பத்திரத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என கூறி இருக்கிறார்கள் என்றால் பத்திரம் எதுவும் ரத்து செய்து உத்திரவு பிறப்பிக்கவில்லை என சாட்சி கூறுகிறார்.

9. மேற்படி சோமநாதன் என்பவர் வாதியாக இருந்து எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் என்றால் சரிதான், இளங்கோவன் என்பவர் தான் சோமநாதன் மீது தாக்கல் செய்திருந்தார். சோமநாதன் இன்றைய தேதி வரையிலும் அவருடைய சொத்து குறித்து எந்த தீர்ப்பும் அவர் வாங்கவில்லை என்று சொன்னால் சாட்சி நேரடியாக பதில் கூறாமல் வேறு சில விவரங்களை கூறி தற்போது மவுனமாக இருக்கிறார்.

10. பொதுவாக சொத்திற்கு பத்திரம் மட்டும் உரிமை ஆவணம் என்றாலும் பட்டா உரிமை ஆவணம் ஆகாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி மீண்டும் நேரடியாக பதில் கூறாமல் நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் அனுப்பி அளந்து பார்த்து கொடுக்கப்பட்டது என கூறுகிறார். 30.05.1994 தேதியிட்ட சோமநாத கவுண்டர் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் முன்னிலைக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என கூறியிருப்பது சரியா என்றால் அது சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின்படி சர்வே எண்.169 –ல் 11.58 ஏக்கர் நிலம் மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால் அது தவறு. அப்படி என்றால் பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்து விவரம் தவறானது என்று தவறு.

11. வா.சா.ஆ.1 புகாரானது யாரால் எழுதப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அதில் என்ன விவரம் உள்ளது என எனக்கு தெரியாமா என்றால் நான் படிக்கவில்லை. அதில் என்னை கையொப்பம் போட சொன்னார்கள் மற்றபடி அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த அதே தேதி 28.08.2022 தேதியில் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சாட்சியிடம் வா.சா.ஆ.4 காண்பிக்கப்பட்டு அதே தேதியில் அதிலும் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

12. மித்ராவின் பெயரில் எந்த தேதியில் பத்திரம் எழுதப்பட்டது என்றால் 1994 ஆம் வருடம். மேற்படி மித்ராவிற்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்றால் ஒரு ஏக்கர் நிலம் கொடுத்தோம். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 7 ஏக்கர் 15 சென்ட் ஆகும். வழக்கு சொத்தின் பத்திரம் யாருடைய பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணமான பட்டாவில் மேற்படி மித்ரா என்பவரின் பெயரும் இடம்பெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான்.

13. இன்றைய தேதி வரையில் மேற்படி மித்ராவிற்கும் எனக்கும் எவ்வளவு சொத்துக்கள் என தனித்தனியாக உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனவே 19 சென்ட் நிலம் ஆனது என்னுடைய நிலத்தில் வருகிறதா அல்லது மித்ராவின் நிலத்தில் வருகிறதா என்று என்னால் கூற முடியாது என்று சொன்னால் சாட்சி அதற்கு மித்ராவிற்கு செக் பண்ணி போட்டு தான் ஒரு ஏக்கர் பிரித்து கொடுக்கப்பட்டது என கூறுகிறார்.

14. மேற்படி பத்திரத்தை பார்த்தால் தான் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருக்கும் நிலமானது மித்ராவின் நிலத்திற்கு எந்த பக்கம் வருகிறது என தெரியவரும் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு வா.சா.ஆ.11–ல் காவல் நிலையத்திற்கு நான் புகார் அளித்ததாக கூறப்படுவதற்கு அக்னாலேஜ்மென்ட் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல கொடுத்தார்கள் என்னிடம் உள்ளது தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த முறையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(வாதி தரப்பில் வழக்கறிஞர் மறுவிசாரணை செய்ய பதிவு செய்ய அனுமதி கோருகிறார் எப்போது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என்று அனுமதி கோரப்பட்டது. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தெளிவுபடுத்துவதற்கு எந்தவொரு தெளிவற்றநிலை இல்லை என தெரிவித்தார். இருதரப்பு ஆட்சேபனைகளை கேட்டபிறகு இந்நீதிமன்றம் வாதி தரப்பிற்கு

மறுவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது, மேலும் ஆட்சேபனை குறித்து இறுதி தீர்ப்பின் போது விரிவாக பரிசீலிக்கப்படும்.)

<u>**மறுவிசாரணை**</u>–

1. ஜனவரி மாதம் 2026 பொங்கல் அன்று பிறகு தான் பிரதிவாதி 19 சென்ட் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்தார்.

<u>**மறு குறுக்கு விசாரணை**</u>–

1. இன்றைய தேதி வரை நான் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் என்றால் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் தேதி நினைவில்லை என சாட்சி பதில் கூறுகிறார். நான் குறுக்கு விசாரணையில் அளித்த பதில் விவரங்கள் அனைத்தும் உண்மையா அல்லது பொய்யா என்றால் நான் உண்மையை தான் கூறினேன்.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.